செ.வெ.எண்:45 நாள்:23.7.2016

**குடும்ப நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது - மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சு.மாரிமுத்து அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அரசுப்பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட குடும்ப நல அமைப்பு, புதுக்கோட்டை சார்பில் உலக மக்கள் தொகை தினம் 2016 விழிப்புணர்வு பேரணி மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சு.மாரிமுத்து அவர்கள் தலைமையில் இன்று (23.07.2016) நடைபெற்றது.

இந்த உலக மக்கள் தொகை தினம் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு உலக மக்கள் தொகை தினம் ஆண்டுதோறும் ஜுலை 11ம் நாள் அனுசரிக்கப்படுவதை முன்னிட்டு பொதுமக்களிடையே மக்கள் தொகை பெருக்கத்தினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் அறந்தாங்கி அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் உலக மக்கள் தொகை தினம் 2016 விழிப்புணர்வு பேரணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.




இப்பேரணியில் கலந்து கொண்டோர் "அளவான குடும்பம் வளமான தமிழகம், சிறுகுடும்பம் சிறப்பான வாழ்வு" உள்ளிட்ட பல்வேறு குடும்பநல விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி 500க்கும் மேற்பட்ட பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இப்பேரணியானது அரசுப்பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் துவங்கி தேரடிவீதி, பெரியகடைவீதி, எம்.ஜி.ஆர் சிலை, பழைய மருத்துவமனை சாலை, கட்டுமாவடி முக்கம், கட்டுமாவடி சாலை வழியாக மலர் மஹாலை சென்றடைந்தது.

மேலும் மலர் மகாலில் நடைபெற்ற உலக மக்கள் தொகை தினம் விழிப்புணர்வு கருத்தரங்கில் மருத்துவ அலுவலர்கள் சிறு குடும்ப நிதி, திருமணத்திற்கு ஏற்ற வயது, முதல் குழந்தையை தாமதப்படுத்த மேற்கொள்ள வேண்டிய குடும்பநல முறைகள், முதல் குழந்தைக்கும், இரண்டாவது குழந்தைக்கும் இடையே தேவையான இடைவெளி, பெண் கல்வியை மேன்மேலும் ஊக்குவித்தல், பெண் சிசு கொலையை தடுத்தல் போன்ற பல்வேறு குடும்ப நலத்திட்டம் குறித்த செய்தியினை விளக்கமாக எடுத்துரைத்தனர்.

உலக மக்கள் தொகை தின நாளை முன்னிட்டு நடைபெற்ற பேச்சுப்போட்டியில் கலந்து கொண்ட குரும்பக்காடு லாரல் மேல்நிலைப்பள்ளி மாணவி நிஷாந்தினி முதலிடத்தையும், அறந்தாங்கி அரசுப்பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி பௌஷியாபேகம் இரண்டாம் இடத்தையும், அறந்தாங்கி அலி ஜைனம் அரபி மேல்நிலைப்பள்ளி மாணவி ஹேமா மூன்றாம் இடத்தையும், ஓவியப்போட்டியில் பங்கு பெற்ற புதுக்கோட்டை மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி மாணவி லெட்சுமி முதல் இடத்தையும், கைக்குறிச்சி பாரதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவி சண்முகப்பிரியா இரண்டாம் இடத்தையும், தனலெட்சுமி மூன்றாம் இடத்தையும் பெற்றதை தொடர்ந்து அவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டது.

தமிழகஅரசு மக்கள் தொகை பெருக்கத்தினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து பொதுமக்களுக்கு போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பொறுப்புகளை நிறைவேற்ற திட்டமிடுங்கள் என்ற கருத்து முழக்கத்துடன் குடும்ப நல சேவைகளை முழுவீச்சில் செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் ஆண்கள் 25 வயதுக்கு பிறகும், பெண்கள் 21 வயதுக்கு பிறகும் திருமணம் மற்றும் 1 அல்லது 2 குழந்தைகள் என்ற அளவில் குடும்பத்தின் அளவை கட்டுப்படுத்துவதன் மூலம் வீட்டிலும், நாட்டிலும் மகிழ்ச்சி நிலவ வாய்ப்பு ஏற்படுவதுடன் வாழ்க்கைத்தரம் உயர வழிவகை ஏற்படும். மேலும் தமிழகஅரசு ஜூலை மாதத்தில் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் சிறப்பு குடும்ப நல முகாம்கள் மற்றும் சிறப்பு ஆலோசனைகளும் வழங்கி வருகிறது. இதன் மூலம் குடும்பநலத்திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. எனவே பொதுமக்கள் அனைவரும் இத்தகைய குடும்பநலத்திட்டங்களை முழுமையாக அறிந்து பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டும் என்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சு.மாரிமுத்து அவர்கள் கூறினார்.

பின்னர் மலர் திருமண மண்டபத்தில் உலக மக்கள் தொகை தினம் 2016 விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றதை தொடர்ந்து செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழகஅரசின் சாதனை விளக்க புகைப்படக்கண்காட்சியினை அனைவரும் பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மற்றும் தனி அலுவலர் மரு.டி.பரிமளாதேவி, இணை இயக்குநர் - மருத்துவம், ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்ப நலம் (பொ) மரு.எஸ்.சையது மொய்தீன், துணை இயக்குநர் - தொழுநோய் மரு.எஸ்.சாமியப்பன், பயிற்சி ஆய்வு மருத்துவர் மரு.சுபாஷ்காந்தி, நகராட்சி ஆணையர் திரு.என்.மீராஅலி, மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.பொ.ரேணுகா, அறந்தாங்கி மாவட்ட கல்வி அலுவலர் திருமதி.ஆர்.சந்தியா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**